செ.வெ.எண் : 947/2017 நாள்: 09.12.2017

**ஊரக வளர்ச்சித்துறை மூலம் குடிநீர் வசதி, பள்ளி கட்டடங்கள், சாலைகள், சீரமைப்பு மற்றும் வீழ்ந்த மரங்களை அகற்றும் பணிகள் முழு வீச்சில் நடைபெறுகிறது - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 30.11.2017 அன்று ஒகி புயலால் கடுமையான பாதிப்புகள் மற்றும் சேதங்கள் ஏற்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அகஸ்தீஸ்வரம், தோவாளை, இராஜாக்கமங்கலம். குருந்தன்கோடு, தக்கலை, திருவட்டார், கிள்ளியூர், முஞ்சிறை மற்றும் மேல்புறம் ஆகிய 9 ஊராட்சி ஒன்றியங்களில் அரசு நிலங்களிலுள்ள 11,299 மரங்கள் முறிந்து விழுந்ததில் இதுவரை 10,994 மரங்கள் அகற்றப்பட்டு மீதமுள்ள 305 மரங்களை அகற்றும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 95 கிராம ஊராட்சிகளுக்குட்பட்ட 1,155 குக்கிராமங்களில் 375 குக்கிராமங்களுக்கு 75 ஜெனரேட்டர் மூலமாகவும், 4 குக்கிராமங்களுக்கு லாரிகள் மூலமாகவும், மீதமுள்ள 769 குக்கிராமங்களுக்கு மின் விநியோகம் சீர் செய்யப்பட்டு மின்மோட்டார் மூலமாக குடிநீர் விநியோகம் 100 சதவீதம் தடையின்றி நடைபெற்று வருகிறது.

மாவட்டத்தில் உள்ள அரசு தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 18 தொடக்க பள்ளி கட்டிடங்களும், 9 நடுநிலை பள்ளி கட்டிடங்களும் பாதிப்படைந்துள்ளது. இதில் 15 கட்டிடங்கள் ஊரக வளர்ச்சித்துறை மூலம் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளன. 12 கட்டிடங்கள் பழுதுநீக்கம் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

ஊரக பகுதிகளில் 2,352 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 192.239 கி.மீ நீளமுள்ள 259 சாலைகள் பாதிப்படைந்துள்ளது. இதில் உடனடி போக்குவரத்து வசதிக்காக 8.34 கி.மீ நீளமுள்ள 13 சாலைகளில் போர்கால அடிப்படையில் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள சாலைகளிலும் விரைவில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேற்கண்ட பணிகளை துரிதமாக செயல்படுத்துவதற்காக ஊரக வளர்ச்சித்துறை இயக்குநரகத்திலிருந்து 2 கூடுதல் இயக்குநர்களும், ஒரு கண்காணிப்பு பொறியாளரும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மேலும் இதர மாவட்டங்களிலிருந்து 2 இணை இயக்குநர்களும், 4 உதவி செயற்பொறியாளர்களும், 6 உதவி பொறியாளர்களும், 200 துப்புரவு பணியாளர்களும் நிவாரண பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**Restoration of Water supply, Repair of School buildings, Roads and Removal of fallen trees in war footing manner by Rural Development and Panchayat Raj Department – Informed by Thiru.K.Baskaran, I.A.S., Director Rural development and Panchayat Raj, Chennai**

Ockhi Cyclone had hit Kanniyakumari District on 30.11.2017 and caused severe damages to public and private properties. In rural areas due to this cyclone 11299 trees have fallen and so far 10994 trees have been cut and removed. Cutting and removal of remaining 305 trees are under progress.

Out of the total 1155 habitations in 95 village panchayats, drinking water supply is being provided to 375 habitations through 75 generators and 4 habitations through tanker lorries. Power supply is totally restored in the rest of 769 habitation and water supply is provided through regular power connections.

Totally 18 Govt. Primary school buildings and 9 Govt. middle school buildings have been damaged due to this cyclone and so far 15 buildings have been repaired and the remaining works are in progress. Out of 2352 panchayat and panchayat union roads, 259 roads having a length of 192.239 K.m have been damaged. In order to facilitate traffic and safe public movement, temporary restoration works are in progress in all the roads.

In order to monitor the relief and restoration works 2 Additional Directors and one Superintending Engineer, deputed from Chennai. Further, 2 Joint Directors and 4 Assistant Executive Engineers, 6 Assistant Engineers are deputed from other Districts. Further, 200 sanitary workers have been deployed from other districts in addition to the local staff for the cleaning and sanitation works in the rural areas.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**